# அபிவிருத்திப் பாதையில்.....

## ஆதார வைத்தியசாலை
## பருத்தித்துறை




ஆதார வைத்தியசாலை
அபிவிருத்திச்சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச்செய்தி


ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

யாழ் வடமராட்சி புலோலி மந்திகை ஆதார வைத்தியசாலை அகில இலங்கை ரீதியில் சுகாதார தரநிர்ணய போட்டியில் இரண்டாம் இடம் பெற்றதை இட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றோம். மேலும் இவ் வைத்தியசாலை பல வழிகளிலும் வளர்ச்சி கண்டு அடுத்ததடவை முதலாம் இடம் கிடைக்க வேண்டும்.

இவ்வைத்தியசாலையில் நிகழும் எவ்வகை நிகழ்வாக இருந்தாலும் இங்கு வீற்றிருக்கும் விநாயகப் பெருமானுக்கு விஷேட ஆராதனையுடன்தான் ஆரம்பமாகும். இவ் வைத்தியசாலை ஸ்தாபித்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டது. இங்கு பணிபுரியும் வைத்தியர்கள், தாதிமார்கள், நிர்வாகிகள், சக ஊழியர்கள் அனைவரினதும் ஒற்றுமையான செயற்பாடே இவ்வளர்ச்சிக்கு காரணம் எனலாம். இங்கு பணிபுரியும் அனைவருக்கும் மற்றும் சிகிச்சை பெறுகின்ற, பெறவருகின்ற அனைவருக்கும் ஆதார வைத்தியசாலை விநாயகப் பெருமான் அருள்பாளிக்க வேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

இங்ஙனம்
சக்திஉபாசகதீரர், கிரியாதிலகம், கிரியாயோதி
**கிரியா ரத்தினம் சிவஸ்ரீ சி.இந்திரராஜக்குருக்கள்**
துன்னாலை இந்திரன் அம்மன் ஆலயம்



## ஆசிச் செய்தி

இலங்கையிலே வைத்தியசாலைகளுக்கிடையே நடைபெற்ற சிறந்த வைத்தியசாலை தெரிவு செய்யும் போட்டியில் இரண்டாவது சிறந்த வைத்ததியசாலையாக பருத்தித்துறை மந்திகை ஆதாரவைத்தியசாலை தெரிவு செய்யப்பட்டிருப்பது குறித்து இப்பகுதியல் வாழ்பவன் என்ற முறையில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன் பெருமை கொள்கின்றேன்.

இலங்கையில் வளர்ச்சியடைந்த பகுதிகள் சிலவற்றுடன் ஒப்பிடுகையில் வசதிகள், வளங்கள், வாய்ப்புக்கள் மிகக்குறைந்த ஒரு பகுதியில் உள்ள இந்த வைத்தியசாலை இப்படியான ஒரு மேன்மையான நிலையை அடைந்திருப்பதற்கு இவ்வைத்தியசாலைக்கு பொறுப்பாக உள்ள மருத்துவ மேற்பார்வையாளர்கள் மற்றும் சகமருத்துவர்கள், தாதிகள், உதவி ஊழியர்கள், துப்பரவுப்பணியாளர்கள் அனைவரினதும் அர்ப்பணிப்புள்ள சேவையே பிரதான காரணம் என்பதை நாம் உணர்ந்துகொள்வதோடு, அவர்களை மனதாரப் பராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன். அடுத்த வருடம் நடைபெறுகின்ற போட்டியிலே இன்னும் முன்னேறி முதலாம் இடத்தை அடைய எல்லாம் வல்ல இறைவனிடம் ஆசி வேண்டுகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள
**அருத்திரு. சி.கே. தங்கராஜா**
முகாமைக்குழு
மேதடிஸ்த திருச்சபை
பருத்தித்துறை கட்டைவேலி சேகரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செயலாளரின் வாழ்த்துச் செய்தி

சுகாதார அமைச்சினால் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் நேரத்தில் நடாத்தப்பட்ட தேசிய ரீதியான சுகாதார அமைச்சினால் வழங்கும் நிறுவனங்களிடையே நடாத்தப்பட்ட தரக்கணிப்பீட்டிற்கான போட்டியில் நடுத்தர அளவான வைத்திய சாலைக்குரிய தேசிய சுகாதார திறமைக்கான விருது 2009 - 2010 போட்டியில் பங்கு பற்றிய 18 பொது வைத்தியசாலைகள் மற்றும் 59 தள வைத்தியசாலைகளில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வெற்றி கொண்ட பருத்தித்துறை தள வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி க.நந்தகுமாரன் அவர்களையும் அவருடன் சேர்ந்து வெற்றிக்காக அல்லும் பகலும் உழைத்த மருத்துவ நிபுணர்கள், மருத்துவ அதிகாரிகள் உட்பட ஏனைய அலுவலர்களையும் ஊழியர்களையும் மனமார வாழ்த்துகின்றேன்.

பருத்தித்துறை வைத்தியசாலையின் 130 வருட வரலாற்றில் இந்நிகழ்வு ஓர் மைல்கல்லாக விளங்குகிறது. இவ்வைத்தியசாலையின் நிர்வாகப் பிரிவு, நோயாளர் விடுதிகள், மருந்துக் களஞ்சியங்கள் ஆகிய பல்வேறு பிரிவுகளும் யப்பானிய ஐந்து "எஸ்" தரவிதிகளுக்கு அமைய பேணப்பட்டு வருகின்றமை மிகவும் பாராட்டத்தக்கது. இது இவ்வைத்தியசாலையின் உற்பத்தித்திறனையும் வினைத்திறனையும் கூட்டி நல்லதோர் சுகாதார சேவையை இப்பகுதிவாழ் மக்களுக்கு வழங்குகின்றது.

இவ்வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு உதவிய பருத்த்துறைவாழ் வெளிநாடுகளில் வசிக்கும் அன்பர்கள், பாடசாலை அதிபர்கள் மாணவ மாணவிகள், வர்த்தக சங்கங்கள், உள்ளூர் மக்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் வைத்தியசாலை அபிவிருத்தி சங்கத்தின் தலைவர், செயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோருக்கும் அவற்றின் ஆலோசகராகிய பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்கட்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வைத்தியசாலை தொடர்ந்தும் வளர்ச்சி அடைந்து எதிர்வரும் காலங்களில் மேன்மேலும் வளர்ச்சியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கின்றேன்.

**இ. இரவீந்திரன்**

செயலாளர், சுகாதார வைத்தியத்துறை அமைச்சு, வடமாகாணம்.



## வாழ்த்துச் செய்தி

மருத்துவசேவை என்பது உன்னதமான சேவை ஆகும். ஒரு மனிதசமூகத்தின் ஆரோத்தை மேம்படுத்துவதாகும். ஒரு ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டிஎழுப்புவதற்கும் மருத்துவசேவை இன்றியமையாததாக மாறிவிட்டது. இதனால்தான் வைத்தியசாலைகள் இன்றியமையாததாக மாறிவிட்டது. இதனால்தான் வைத்தியசாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த உன்னதமான பணியினை சிறப்பாக வினைத்திறனுடன் ஆற்றிவருகின்றது. பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை என்றால் வைத்தியசாலை உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் அர்ப்பணிப்புடன் கூடிய சேவையே ஆகும்.

ஆரம்பகாலத்திலிருந்து வைத்திய சேவையை வழங்குவதற்கு ஆளணிப்பற்றாக்குறை, மருத்துவ உத்தியோகத்தர் பற்றாக்குறை, மருத்துவ துணைச்சேவைகள் பற்றாக்குறை போன்ற பல்வகையான சவால்களுடன் ஆதாரவைத்தியசாலை பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான நிலமைகளை சமாளித்து நோயாளர்களின் சேவையை மேம்படுத்துவதற்கு கட்டிட புனர்நிர்மாணங்கள், வைத்தியசாலை மேம்பாட்டுபணிகள் போன்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் வைத்தியசாலை அபிவிருத்திச்சபையின் பங்களிப்பு வைத்ததியசாலையின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாயுள்ளது. இவ்வளர்ச்சியானது தனிமனித உழைப்பாக இல்லாமல் வைத்தியசாலை உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும், அபிவிருதிச்சபை, ஊர்மக்கள் என அனைவரதும் கூட்டுமுயற்சியினால் சுகாதாரஅமைச்சால் வழங்கப்படும் இவ்விருது ஆதாரவைத்தியசாலைக்கு கிடைத்துள்ளது.

இதனால் வடக்கு மாகாண சுகாதாலத்திணைக்களம் பெருமையடைவதுடன் வடக்கில் அமைந்திருக்கும் வைத்தியசாலைகள் அனைத்தும் ஆதாரவைத்தியசாலையை முன்னுதாரணமாகக் கொண்டு வைத்தியசேவையில் அபிருத்தியை நோக்கி பயணிக்க வேண்டும் என கேட்டுக்கொள்வதோடு பரு.ஆதாரவைத்தியசாலை மேலும் தனது சேவையை மேம்படுத்த வாழ்த்துகின்றேன். இந்த வெற்றிக்கு பங்களித்த வைத்திய அத்தியட்சகர், வைத்தியாகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வைத்தியசாலை அபிவருத்திச்சபையினர் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**க. அகிலன்**

சுகாதாரசேவைகள் மாகாணப்பணிப்பாளர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அபிவிருத்திப் பாதையில் ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை

கடந்த ஆறு ஆண்டு காலமாக ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை பல அபிவிருத்திப் பணிகளை சந்தித்து வந்திருக்கின்றது. அதன் சேவையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப் பணிகள் சில திட்டங்களின் கீழும் பல நிறுவனங்களின் உதவிகளுடனும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றிற்கு மேலாக இப்பிரதேசத்தைச் சேர்ந்த பல பொது மக்கள் இவ் அபிவிருத்தியில் தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர். மேலும் வெளிநாடுகளில் வதியும் இப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் இவ் வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு வழங்கிய பங்களிப்பு அளப்பரியது. சமூகத்தின் பங்களிப்பு சிறப்பாக அமையுமெனில் ஓர் வைத்தியசாலை எவ்வளவு துரிதமாக வளர்ச்சியடை முடியும்மென்பதற்கு இவ்வைத்தியசாலை சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கின்றது.

அண்மையில் மத்திய சுகாதார அமைச்சினால் தேசிய சுகாதார தர நிர்ணய போட்டி சுகாதார நிறுவனங்கள் மத்தியில் நடாத்தப்பட்டது. இதில் மத்தியதர வைத்தியசாலைகள் பிரிவில் நாட்டிலுள்ள 18 பொது வைத்தியசாலைகள் 59 ஆதார வைத்தியசாலைகள் மத்தியில் போட்டியிட்டு ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை வெள்ளிப்பதக்கத்தை (இரண்டாம் இடத்தை) பெற்றது பெருமையும் பெரு மகிழ்ச்சியையும் அளிக்கின்றது. இப்போட்டியில் எத்தனையோ வளம்மிக்க தென்பகுதி வைத்தியசாலைகளுடன் போட்டியிட்டு இரண்டாம் இடத்தைப் பிடித்தது. மிகப்பெரிய சாதனையாகும். மேலும் இவ்வைத்தியசாலையில் தர மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட கடந்த 6 மாதங்களில் இவ் வைத்தியசாலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதன் சேவையும் துரிதமாக மேம்பட்டு வருகின்றது. இதற்கு இவ்வைத்தியசாலையில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் ஊழியர்களின் கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் அடித்தளமாக அமைகின்றது. இவ் வெற்றிக்கு சமுதாயத்தின் பங்களிப்பு பாரிய உந்துசக்தியாக அமைந்தது.

இந்த மகிழ்வான தருணத்தில் இவ்வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கிய அனைத்து நிறுவனங்களிற்கும், உள் நாட்டிலும், வெளிநாட்டிலும் வாழும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் காணிக்கையாகட்டும்.

**வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன்**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.



## பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை, சுகாதார அமைச்சின் தரங்கணிப்பில் அகில இலங்கை ரீதியாக இரண்டாவது இடத்தினைப் பெற்று சாதனை படைத்திருப்பதனையிட்டு இப்பிரதேச மக்கள் பெரு மகிழ்ச்சியடைகின்றனர். கடந்த பல ஆண்டுகளாக வடமராட்சிப் பிரதேச மக்களுக்கு அரும் பணியாற்றி வரும் இவ் வைத்தியசாலையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள நிகழ்வாக இது அமைந்துள்ளது. இவ் வைத்தியசாலையின் உட்கட்டுமான வசதிகள் அதிகரிக்கப்பட்டு தேவையான மருத்துவ உபகரணங்கள் பெறப்பட்டு சுற்றுப்புறச் சூழல் மிகவும் தூய்மையாகவும், அழகாகவும் பேணப்பட்டு வருவது நோயாளர்களுக்கு பேருதவியாக அமைந்துள்ளது. நவீன முகாமைத்துவத்தின் ஓர் அம்சமாகவுள்ள 5S நடைமுறைகளை இவ் வைத்தியசாலை உள்வாங்கியருப்பது அதன் அபிவிருத்தியின் முக்கிய திருப்புமுனையாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ் வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிவரும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி க. நந்தகுமாரன், வைத்திய நிபுணர் கே.சிவராம் ஏனைய வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலையின் அனைத்து உத்தியோகத்தர்கள், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்களாகும். இவர்கள் அனைவரினதும் கூட்டு முயற்சியே தேசிய ரீதியாக பெற்றுக் கொள்ளப்பட்ட இக் கௌரவமாகும்.

இவ் வைத்தியசாலை மேன்மேலும் பல வளர்ச்சிகளைக் கண்டு மக்களுக்கு சேவையினை வழங்க வேண்டுமென வாழ்வதுடன் வைத்தியசாலை சமூகத்திற்கு எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சி. சத்தியசீலன்**
பிரதேச செயலாளர்
வடமராட்சி தெற்கு மேற்கு,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பருத்தித்துறை பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட தரப்படுத்தல் போட்டியில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை 2ம் இடத்தினைப் பெற்றுக் கொண்டமையை இட்டு எனது மகிழ்ச்சியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழைமையான நிலையிலிருந்த ஒருசில நோயாளர் விடுதிகளைத் தவிர அனைத்தும் மெருகூட்டப்பட்டு புதுப்பொலிவுடன் மிக அழகாக காட்சி தருகின்றன. இங்கு தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளும் ஒவ்வொருவரும் தாம் ஓர் வைத்தியசாலையில் இருப்பது போன்ற உணர்வின்றி தமது சொந்த இல்லத்திலிருந்து சிகிச்சை பெறுவது போன்ற இனிமையான உணர்வினைப் பெற்றுக் கொள்வது மிகச் சிறப்பான அம்சமாகும்.

வைத்தியசாலையினதும் நோயாளர்களினதும் தேவைகளை அறிந்து செயல்வடிவமாக்கும் கரும வீரர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களுடைய அயராத உழைப்பு வைத்திய அத்தியட்சகர், வைத்திய நிபுணர்கள் மற்றும் வைத்திய அதிகாரிகளுடைய உயிரோட்டமான சேவைகள், வைத்தியசாலை பணியாளர்கள் ஊழியர்களுடைய தன்னலமற்ற சேவைகள் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் இடையறாத சீரிய பணிகள், காலத்தின் தேவையறிந்து உதவும் அரச, அரச சார்பற்ற, தொண்டர் நிறுவனங்கள் மற்றும் பொது நலன்விரும்பிகள் அனைவரும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

இவ் வைத்தியசாலை மேலும் பல அபிவிருத்திகளைக் கண்டு சிகிச்சை பெற வரும் ஒவ்வொருவரினதும் பரிபூரணமான திருப்தியைப் பெற்று மென்மேலும் உயர்வடைய வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

**இ. வரதீஸ்வரன்**
பிரதேச செயலாளர்
பருத்திதித்துறை.



## வடமராட்சி மக்களின் உயிர்காக்கும் பணியில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வடமராட்சி மக்களினுடைய வைத்தியத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவனமாக சேவையில் முன்னேற்றப்பாதையில் முத்திரை பதித்து நிற்கின்றது. இரு தாசப்தங்களுக்கு முன்பு மருத்துவத் துறையின் சகல துறை சார்ந்த நிபுரணர்களின் சேவைகளோடு வளர்ச்சியடைந்து வந்த வேளையில் நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக ஒரு சில வைத்தியர்களுடன் மட்டும் இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. குறிப்பாக போர் காரணமாக 1995ம் ஆண்டு வலிகாமம் பகுதி மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் தங்கியிருந்த வேளையில் யாழ் போதனா தைத்தியசாலையும் வைத்திய தளபாடங்கள், ஆளணியினருடன் பருத்தித்துறை வைத்தியசாலையில் இயங்குவதற்கு வைத்தியசாலை நிர்வாகமும் இப்பிரதேச மக்களும் வழங்கிய ஒத்துழைப்பும் ஆதரவும் இவ்வேளையில் நினைவு கூரப்பட வேண்டியதொன்றாகும். மேலும் அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட 5S திட்டமும் சுகாதார அமைச்சினால் பரிந்துரைக்கப்பட்ட 5S திட்டமும் பிராந்திய சுகாதார பணிப்பாளரின் நேரடி வழகாட்டலில் கீழ் செயற்படுத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே அதனால் வைத்தியசாலை சுற்றுச்சூழல் ரம்மியமாக காட்சி தருகின்றது.

இதனால் கடந்த 4 - 5 வருடங்களில் மனவுறுதியோடும் விடாமுயற்சியுடனும் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் நல்ல வழிகாட்டலில் இயங்கிக்கொண்டிருக்கும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினரதும், மற்றும் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் ஏனைய ஊழியர்கள் போன்றோரதும் அர்ப்பணிப்பான சேவையினால் வளர்ச்சியடைந்து இன்று மத்திய சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட தேசிய சுகாதாரத் தரநிர்ணயப் போட்டி - 2009/2010 இல் பொது மற்றும் ஆதார வைத்தியசாலைகளின் பிரிவில் இரண்டாவது இடத்தினைப் பெற்று மிளிர்கின்றது. தற்போது பெரும்பாலான நோயாளிகள் யாழ்போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படாது இயன்றவரை இவ்வைத்தியசாலையிலேயே அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் தென்னிலங்கை வைத்தியர்களும் மனமுவந்து இங்கு தங்கி மகத்தான சேவை புரிவது முன் மாதிரியானதும் பாராட்டப்படவேண்டிய ஒரு விடயமுமாகும். இதற்காக உழைத்த அனைவருக்கும் மக்களின் சார்பில் நன்றி தெரிவிப்பதோடு இன்று தனக்கென ஓர் தனியிடம் பதித்து நிற்கும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையானது சகல வைத்திய நிபுணர்களின் சேவையோடு பொது வைத்தியசாலையாக விரைவில் தரமுயர்ந்து தனது சேவையில் தொடர்ந்தும் வளர்ச்சியடை வாழ்த்துகின்றேன்.

- நன்றி -

**ந. திருலிங்கநாதன்,**
உதவி அரசாங்க அதிபர்,
வடமராட்சி கிழக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அபிவிருத்திச் சபைத் தலைவரின் உள்ளத்திலிருந்து

ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை பல தசாப்தங்களைக் கடந்து பல இன்னல்களையும் தடங்களையும் தாண்டி இன்று வெற்றிப் பாதையில் கால் பதித்துள்ளது.

அண்மையில் எமது வைத்தியசாலை மத்திய சுகாதார அமைச்சின் தர நிர்ணய போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை தட்டிக் கொண்டமை இவ் வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு தன்னலம் கருதாது அயராது உழைத்த அனைவருக்கும் கிடைத்த வெற்றியாகும். மேலும் இவ் வெற்றி மூலம் எமது மக்கள், எமது ஊழியர்கள் சொல்லும் செய்தி நாங்களும் எதற்கும் சளைத்தவர்கள் இல்லை. எங்களாலும் மற்றவர்களுக்கு இணையாக போட்டியிட முடியும் என்பதேயாகும்.

இவ்வைத்தியசாலைக்கு கிடைத்த இந்த வெற்றி தேசிய ரீதியில் இவ் வைத்தியசாலைக்குக் கிடைத்த அங்கீகாரம் எனவும் கூறலாம்.

யாழ் பிராந்திய சுகாதார திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களின் சிறந்த வழிநடத்தலுடனும் எமது ஊழியர்களினதும் இவ்வூர் மக்களினதும் பங்களிப்புடனும் இவ் வெற்றியை அடைய முடிந்ததுடன் எமது பிரதேசத்தில் உள்ள ஏனைய வைத்தியசாலைகளிற்கு ஓர் முன்மாதிரியாக திகழ்கின்றது. எமது தர மேம்பாட்டுத்தடங்கள் அனைத்தும் நோயாளர் சேவையை மேம்படுத்தும், அவர்களின் திருப்தியை மேம்படுத்தும் நோக்கங்களைக் கொண்டவை. எமது இத்திட்டங்களுக்கு ஆளணிப் பற்றாக்குறை ஓர் தொடர் சவாலாக உள்ளது. ஆனால் இந்தநிலைமாறி வைத்திய நிபுணர்கள் வைத்திய அதிகாரிகள் தா.உ. எதிர்காலத்தில் போதியளவு நியமிக்கப்படுவார்கள் என நம்புகின்றோம். இவ்வாறு நியமிக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே எமது வைத்தியசாலை பெயரளவில் மட்டுமல்லாது சேவையிலும் முழுமையான ஓர் ஆதார வைத்தியசாலையாக மிளிர முடியும்.

வைத்தியசாலையின் சேவையை மேம்படுத்த மேலதிக நிதி தேவைப்பட்டது. அவற்றை பெற்றுக்கொள்ள ஊர்மக்கள் நலன் விரும்பிகள் வெளிநாடுகளில் வசிக்கும் இப்பிரதேச மக்கள் வர்த்தகர்கள் என அனைவரினது பங்களிப்பும் எமக்கு கைகொடுத்தன, ஊக்கமளித்தன. இவர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட நிதியின் மூலமே வைத்தியசாலை அபிவிருத்திச்சபை அனைத்துத் திட்டங்களுக்கும் செயல்வடிவம் கொடுத்தது. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அப்விருத்திப்பாதையில் அடியெடுத்து வைத்தது. இப்பயணம் தொடர சேவை மனப்பாங்குடைய அனைவரினதும் ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம்.

நன்றி

**வைத்திய கலாநிதி க. நந்தகுமாரன்**
தலைவர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி பாதையில் நாம்



வடமராட்சி மக்களுக்கு சேவை செய்யும் நோக்கில் சில ஆண்டுகளுக்கு முன்பு பருத்தித்துறைஆதார வைத்தியசாலை அபிவிருத்தியை நோக்கி பயணிக்க ஆரம்பித்தது. ஆரம்பத்தில் சிரமதான பணி மூலம் பல வேலைகள் முன்னெடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன. வைத்தியசாலையில் பணிபுரிந்த வைத்திய அதிகாரிகள், சகோதரமொழி பேசும் வைத்திய உயர் அதிகாரிகள் முதல் சிற்றூழியர் வரை தமது பங்களிப்பை நூறு வீதம் செய்தனர். ஒரு புதிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. எமது பணிகள் தொடர அபிவிருத்திக் குழுவின் கைகளைப்பலப்படுத்த எல்லோரையும் வேண்டுகிறோம் என வேண்டுகோள் விடுத்தோம். இதன் பின்பு வைத்தியசாலை பற்றிய கருத்து மாற்றமடைந்து அபிவிருத்திப்பணிகள் எல்லாம் நம்பகத்தன்மையுடையனவாகவும், நேர்மையாகவும், உண்மையாகவும், அர்ப்பணிப்புடனும் செயற்பட்டது கண்டு எல்லோருக்கும் நம்பிக்கை ஏற்பட்டது. தனியார், அரசசார்பற்ற நிறுவனங்கள், அரச நிறுவனம் போன்றவைகள் நிதி உதவிகள் செய்தார்கள்.

அபிவிருத்தியை நோக்கி பயணிக்கத் தொடங்கிய எமக்கு உற்சாகமளிக்கக் கூடிய வகையில் எல்லாம் அமைந்தன. அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் பலரதும் ஆலோசனைகள் எம்மை உற்சாகப்படுத்தின. யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்களது பங்கு அளப்பரியது. ஒவ்வொரு விடயங்களிலும் சிறிதோ பெரிதோ அதுபற்றி விவாதித்து சரியான வழியைக் காட்டி எமக்கு ஊக்கம் தந்ததுடன் மட்டுமல்லாது எங்கெங்கு எவ்வாறு நிதிகளைப் பெறலாம் என்பதை அறிந்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நிதியைப் பெற்றுத்தந்தார். வெளிநாட்டில் வசிக்கும் தனது நண்பர்கள் மூலம் நிதியைப் பெற்றுத்தந்தார். வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள் பற்றாக்குறை பெருமளவு அவரது முயற்சியால் நிறைவு செய்யப்பட்டுள்ளது. எப்படி வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்கள் ஆர்வம் காட்டினாரோ, அதற்கு ஈடாக அபிவிருத்தி வேலைகளைச் செய்து முடிப்பதில் எமது பொருளாளர் திரு.இ.அகிலன் அவர்கள் மிகவும் நெருக்கடியான வேலைப்பளுக்களுக்கு மத்தியில் ஆர்வத்துடன், செயற்பட்டதை எவராலும் மறக்கமுடியாது.

அவர் வைத்திய ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராக கடமை செய்து கொண்டு பாரிய அபிவிருத்தி வேலைகளையும் செய்தது அவரால் மட்டுமே முடியும். அதேவேளை பதில் மாவட்ட வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய வைத்திய கலாநிதி வே.ஜெயராஜா அவர்கள் தகுந்த நேரத்தில் பதவி ஏற்றது பெரும் உறுதுணையாக இருந்தது. பின்வு வைத்தியசாலையை பொறுப்பேற்ற வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி க. நந்தகுமாரன் அவர்கள் அபிவிருத்தி வேலைகளில் மிகவும் ஆர்வமும் உற்சாகமும் கொண்டு பலரையும் அணுகி செயற்பட்டுவருவது எமக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. எங்கெங்கு மனதநேயம் பேணப்படுகிறதோ அங்கெல்லாம் இறைவன் இருப்பான் எமது பணிகளுக்க உதவிய அனைவருக்கும் சேவை மனப்பான்மையுடன் சேர்ந்து இயங்கும் அபிவிருத்திக்குழு சார்பாகவும், வடமராட்சி மக்கள் சார்பாகவும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மு. சுந்தரலிங்கம்,**
செயலாளர்
ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வைத்தியசாலை அபிவிருத்திக்காக ஒன்றிணைவோம்

இன்று வளர்ந்து வரும் உலகில் காப்பாளனாக மருத்துவ சேவை விளங்குகிறது. நோய்களை கட்டுப்படுத்துவது, நோய்கள் வராமல் தடுப்பது குணப்படுத்த முடியாத நோய்களுடன் வாழ்வதற்கு வேண்டிய சேவையை வழங்குவது என மருத்துவ சேவை பல்வேறு பரிமாணங்களுடன் வளர்ந்து வருகின்றது. இவ்வாறான சேவைகளின் மையமாக வைத்தியசாலைகள் பிரதான பங்கு வகிக்கின்றன. சமுதாயத்தின் மருத்துவ காவலனாக வைத்தியசாலைகள் புதிய பரிணாமம் பெற்று சேவைகளை விஸ்தரித்து வளர்ந்துள்ளது.

இன்று அந்த மேலான சேவையை எங்கள் பருத்தித்துறையை ஆதார வைத்தியசாலை நோயாளர்களுக்கு வழங்கி வருகின்றது. ஆரம்ப காலத்தில் நோயாளர்களுக்கு பூரணமான சேவையை வழங்குவதற்கு தடையாக பல்வேறு குறைபாடுள் காணப்பட்டன. இவற்றை நீக்கி சேவைகளை பூரணமாக வழங்குவதற்கு கைகொடுக்க அபிவிருத்திசபை தீர்தானித்தது. இதனால் வடமராடசியின் மண்ணின் புதிய சாகப்தம் ஆரம்பமானது. எங்கள் உறவுகளின் உதவியுடன் பல்வேறு அபிவிருத்திப்பணிகள் வேகமாக முன்னெடுக்கப்பட்டன, இலக்குகள் தீர்மானிக்கப்பட்டன, பயணங்கள் அபிவிருத்தி நோக்கி நகர்ந்தன.

வைத்தியசாலை கட்டடங்கள் கட்டப்பட்டன. பல கட்டடங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டன. நோயாளர் சேவைக்காக உறவுகள் தோள் கொடுத்தனர். எங்கள் அன்புக் கரங்கள் ஒன்று சேர்ந்த உழைப்பு இன்று மத்திய சுகாதார அமைச்சினால் நடாத்தப்பட்ட தரநிர்ணய போட்டியில் நடுத்தரப்பிரிவில் தேசிய ரீதியில் இரண்டாவது வைத்தியசாலையாக வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளது என்றால் மிகையாகாது.

அபிவிருத்தியை நோக்கிய பயணம் இன்று அபிவிருத்திப் பாதையில் வைத்தியசாலையின் தேவைகளை சுமந்தபடி முன்னேறுகின்றது. மருத்துவ தேவையின் தரத்தை உயர்த்தி மேலும் பல சேவைகளை வழங்குவதற்கு அபிவிருத்திப் பாதையில் முன்னேறுவோம். எதிர்காலத்தில் சாதனைகள் படைப்போம் விருதுகள் பெறுவோம் அபிவிருத்திப் பாதையில் எங்கள் பயணம் தொடரும்.

**இ. அகிலன்**
பொருளாளர்
ஆதாரவைத்தியசாலை அபிருத்திச்சபை,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேற்றப்பட்ட அபிவிருத்தித்திட்டங்கள் 2005 தொடக்கம் 2011 வரை

(01) பிரசவ விடுதி புனரமைப்பு
– யுனிசெவ்



(02) பிரசவ அறை புனரமைப்பு
– ASP போர்த்துக்கல்



(03) இரத்த வங்கி புனரமைப்பு
– MDM போர்த்துக்கல்



(04) அவசர சிகிச்சைப் பிரிவு புனரமைப்பு
- MDM போர்த்துக்கல்



(05) பற்சிகிச்சைப்பிரிவு புனரமைப்பு
- ASP போர்த்துக்கல்



(06) உளநல சேவைப்பிரிவு புனரமைப்பு
– Lions Club






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(07) கழிவகற்றல் பிரிவு – MSF



(08) விடுதி 02 புனரமைப்பு
– புலம்பெயர்ந்த வடமராட்சி மக்கள்



(09) விடுதி 08 புனரமைப்பு
– வடமராட்சி மக்கள்



(10) விடுதி 06 புனரமைப்பு
– உலக வங்கி (HSDP)



(11) விடுதி 07 புனரமைப்பு
– உலக வங்கி (HSDP)



(12) வெளிநோயாளர் பிரிவு புனரமைப்பு
– உலக வங்கி (HSDP)




(13) மருந்துக்களஞ்சியம் கட்டுமானம்
- NECORD



(14) வைத்திய நிபுணர்கள் விடுதி
கட்டுமானம் - NECORD






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(15) பார்வையாளர் தங்குமிடம் கட்டுமானம் - யுனிசெவ்



(16) சிறுவர் பூங்கா – SAVE THE CHILDREN



(17) சைக்கிள் மோட்டார் சைக்கிள் தரிப்பிடம் - உலக வங்கி (HSDP)



(18) மலேரியா தடை இயக்கப்பிரிவு - யுனிசெவ




(19) அம்புலன்ஸ் வண்டி - யுனிசெவ்




(20) அம்புலன்ஸ் தரிப்பிடம் நிர்மாணம் - NECORD



(21) மின் பிறப்பாக்கி – JAPAN



(22) Mortuary Cooler Indian Government





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய சுகாதார தர நிர்ணய போட்டி 2009 / 2010
## மத்திய சுகாதார அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டது

பிரிவு :- நடுத்தர வைத்தியசாலைகள்
(பொது, ஆதாரவைத்தியசாலைகள்)

தங்கப்பதக்கம் - பொதுவைத்தியசாலை, கேகாலை
வெள்ளிப்பதக்கம் - ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை
வெண்கலப்பதக்கம் - பொதுவைத்தியசாலை மாத்தளை



**தரமுன்னேற்ற திட்ட அறிமுகம்**
பயிற்சி நிலையம் - SLIDA





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) தர முன்னேற்ற திட்டத்திற்கு முன்பு

(ஆ) தர முன்னேற்ற திட்டத்திற்கு பின்பு



Ward 06



Ward 06



OPD Front View




OPD Front View



Ward 07



Ward 07



Ward 10 approach path




Ward 10 approach path




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Record Room



Record Room



OPD



OPD




Conference Hall



Conference Hall



OPD Dispensary



OPD Dispensary



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








5 S Coner






Record Room



Chlorination Pump










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் படம்



| | | |
|---|---|---|
| போசகர் | - வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் | |
| தலைவர் | - வைத்தியகலாநிதி க. நந்தகுமாரன் | |
| உபதலைவர் | - செ. செதுராஜா | அதிபர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம். |
| செயலாளர் | - மு. சுந்தரலிங்கம் | பிரபல வர்த்தகர். |
| உப செயலாளர் | - இ.இராகவன் | அதிபர் யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம். |
| பொருளாளர் | - இ. அகிலன் | மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலாளர். |
| உறுப்பினர்கள் | - எஸ். சற்குணானந்தம் | சமூகசேவையாளர் |
| | - எஸ். தங்கராஜா | பிரபல வர்த்தகர் |
| | - வ. செல்வராஜன் | பிரபல வர்த்தகர் |
| | - பெ. பூபாலசிங்கம் | எழுதுவினைஞர் |
| | - மு. இரவிச்சந்திரன் | மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர். |
| | - எஸ். சுந்தரமூர்த்தி | பிரதி கல்வி பணிப்பாளர் |
| | - சி. பத்மநாதன் | பிரபல வர்த்தகர். |
| | - வின்சன்டிபோல் | சமூகசேவையாளர். |
| | - கே. சிவராஜா | கட்டட ஒப்பந்தகாரர். |
| | - எஸ். கணபதிப்பிள்ளை | சமாதான நிதவான். |
| | - கே. குமாரதாசன் | HNB அசூரன்ஸ் |

அபிவிருத்திப் பாதையில் ....
ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தியை நோக்கிய பாதையில் ஊக்கத்துடன் பங்களித்த உங்களுக்கு எங்கள் உளங்கனிந்த நன்றிகள்!

உயர்வுக்காய் உழைத்த உறவுகளுக்கான பாராட்டுவிழாவையும், அபிவிருத்தி வேலைகளை தெளிவுபடுத்தும் நோக்கத்திலும் உருவாகிய இம்மலரிற்கு, ஆசிச்செய்திகளையும் வாழ்த்துச் செய்திகளையும் தந்த பெரியோர்களுக்கும், மலரை அழகுற வடிவமைத்ததற்கு உதவியதோளோடு தோள் நின்ற அம் அன்பு நெஞ்சங்களுக்கும், மலரை அச்சிட்டு தந்துதவிய அச்சகத்தினருக்கும் எமது நன்றிகள்!

இவ் வைத்தியசாலையில் திறமையுடனும் புரிந்துணர்வுடனும் சேவை புரிந்துவரும் எவரெடி கிளினேர்ஸ் வேலையாளர்களுக்கும் அபிவிருத்திச்சபை சார்பான மனமார்ந்த நன்றிகள்.

அபிவிருத்திச் சபை,
ஆதாரவைத்தியசாலை,
பருத்தித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org